ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

சிரேஷ்ட பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச்செய்வதற்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு பின்வரும் தேவைப்பாடுகளுடன் கூடிய முப்படைகளில் அல்லது இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையில் நிரந்தர சேவையில் பணியாற்றியுள்ள தகைமைபெற்ற அத்துடன் அனுபவமுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து இலங்கை மத்திய வங்கி விண்ணப்பங்களை கோருகின்றது.

# சிரேஷ்ட பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர் (தொழிற்பாடுகள்)/ சிரேஷ்ட பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர் (தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு)

(பதவி- ஒப்பந்த அடிப்படை)

## 1.0 பணி/ பொறுப்புக்கள்:

- தலைமைவகித்தல், கண்காணித்தல், கட்டுப்படுத்தல், பயிற்றுவித்தல் மற்றும் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் தீயணைப்பு உபகரணங்கள் என்பவற்றின் தொழிற்பாட்டு இயக்கத்தினை மேற்பார்வைசெய்தல் மூலம் இலங்கை மத்திய வங்கி நிறுவனங்களின் ஒட்டுமொத்த பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு பாதுகாப்பு நோக்குகளைத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல் மற்றும் விருத்திசெய்தல்.
- இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு வசதியளிப்பதற்கு பாதுகாப்பான சூழலை உறுதிசெய்வதற்காக ஒட்டுமொத்த தொழிற்பாடுகளின் பாதுகாப்பு நோக்குகளையும் உறுதிசெய்கின்ற அதேவேளை அனைத்து பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் பற்றியும் விழிப்பாக இருத்தல் மற்றும் சாத்தியமான அச்சுறுத்தல்களிலிருந்து ஆதனங்களைப் பாதுகாத்தல்.
- இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவத்தினால் குறித்தொதுக்கப்படும் மத்திய வங்கி பாதுகாப்பு, தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்புபட்ட ஏதேனும் வேறு கடமைகளை நடைமுறைப்படுத்தல்.

## 2.0 பொருத்தப்பாடு:

- பாரிய பாதுகாப்பு ஆளணியைக் கொண்ட குழுவினை ஊக்குவித்து கட்டுப்படுத்துவதற்கும் அவர்கள் தொடர்பில் கட்டளை வழங்குகின்ற அதேவேளை கண்டிப்பான ஒழுக்கத்தைப் பேணுவதற்கும் சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும் இயலுமையினையும் கொண்டிருத்தல்.
- இலங்கைப் பொலிஸ் மற்றும் முப்படைகள், அரசாங்கத் திணைக்களங்கள், அமைச்சுக்கள் அதேபோன்று நிதியியல் நிறுவனங்கள் என்பவற்றுடன் இடைத்தொடர்பை ஏற்படுத்துவதற்கான உன்னதமான ஆட்களுக்கிடையிலான மற்றும் தனிப்பட்ட தொடர்பூட்டல் தேர்ச்சிகளைப் பெற்றிருத்தல்.

## 3.0 குறைந்தபட்சத் தேவைப்பாடுகள்:

### 3.1 கல்வித் தகைமைகள்

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஏதேனும் துறையில் முதுமானி அல்லது உயர்மட்ட பட்டப்பின்படிப்புப் பட்டம்.

### 3.2 வயது

2023.11.15 அன்று 40 வயதிற்குக் குறையாதும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்

### 3.3 அனுபவம்:

- முப்படைகளின் அல்லது இலங்கைப் பொலிஸ் - விசேட அதிரடிப்படை நிரந்தர சேவையில் கறைபடியாத மற்றும் தொடர்ச்சியான சேவையுடன் குறைந்தபட்சம் 22 வருடங்களைக் கொண்ட அனுபவம்.
- படைப்பிரிவு, காலாற்படை, வெடிபொருள், பொறுப்பாளர், அலுவலர் கடமைகள், விசேட படைகள், ஆயுத அல்லது உடற்பயிற்சி போதனாசிரியர், தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளில் விசேடத்துவம் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.

### 3.4 முப்படைகளில்/இலங்கைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையில் வகித்த பதவிநிலை

இலங்கை தரைப்படையில் லெப்டினன்ட் கேணல், இலங்கை கடற்படையில் கட்டளை அதிகாரி, இலங்கை வான்படையில் வான் கட்டளைத் தளபதி அல்லது இலங்கை பொலிஸ் - விசேட அதிரடிப்படையில் பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் பதவிநிலையில் அல்லது அதற்கு மேல் ஓய்வுபெற்ற அலுவலர்கள்.

### 3.5 ஏனைய தேவைப்பாடுகள்

நாட்டின் எப்பாகத்திலும் ஏதேனும் களப் பணிகளைக் கொண்டு நடாத்துவதற்கு மருத்துவ, உடல் மற்றும் உள ரீதியாகப் பொருத்தமானவராக இருத்தல்.

**விண்ணப்பத்துடன் சேர்த்து தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் என்பவற்றுடன் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு கண்டிப்பாக ஆலோசனை வழங்கப்படுகின்றது. மேற்குறித்த ஆவணங்களின் பிரதிகளின்றி சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் ஆட்சேர்ப்புச் செயன்முறையில் எந்தவொரு கட்டத்திலும் ஏதேனும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.**

## 4.0 தொழில்:

மூன்று (03) ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையில். ஒப்பந்தங்கள், தொடக்கத்தில் ஒரு (01) ஆண்டுக்காக கைச்சாத்திடப்பட்டு வங்கியின் தேவைப்பாடுகள் மற்றும் தனிப்பட்ட செயலாற்றம் என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் மீளப்புதுப்பிக்கப்படும்.

## 5.0 ஊதியம் மற்றும் ஏனையவை:

மாதமொன்றுக்கு அனைத்தும் உள்ளடங்கலாக வரி விதிக்கத்தக்க நிலையான கொடுப்பனவு ரூ.300,000/= அத்துடன் சம்பளத்தின் 12 சதவீதம் மற்றும் 3 சதவீதத்திற்குச் சமமான தொகை முறையே ஊழியர் சேமலாப நிதியத்தின் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்புக்களாக இலங்கை மத்திய வங்கியினால் பங்களிப்புச் செய்யப்படும்.

## தெரிவுசெய்யப்படும் முறை

எழுத்து மூலப் பரீட்சையின் பின்னர் ஒரு நேர்முகப்பரீட்சை அல்லது ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் அடிப்படையில் பொருத்தமான அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

## விண்ணப்பங்கள்

விண்ணப்பப் படிவங்களைச் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம்செய்யலாம் https://www.cbsl.gov.lk/en/careers

குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையே பயன்படுத்துமாறு விண்ணப்பதாரிகள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் 2023.11.15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் மனித வளங்கள்/ பணிப்பாளருக்கு கிடைக்கும் விதத்தில் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிரேஷ்ட பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர் பதவிக்கான (தொழிற்பாடுகள்) (ஒப்பந்த அடிப்படை) விண்ணப்பம் அல்லது சிரேஷ்ட பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர் (தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு) (ஒப்பந்த அடிப்படை பதவிக்கான விண்ணப்பம் (ஒப்பந்த அடிப்படை)"எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

முடிவுத் திகதியன்று உள்ளவாறு வேண்டப்பட்ட தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமைபெறமாட்டார்.

வேண்டப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

சான்றிதழ் உறுதிப்படுத்தலின் போது தொடர்புடைய மூல ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எக்காரணத்தின் கீழும் இப்பதவிக்கு நியமிப்பதற்குக் கருத்தில்கொள்ளப்படமாட்டார்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும்.

ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான/ இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

தெரிவு அட்டவணைப்படுத்தப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.


பணிப்பாளர் - மனிதவளங்கள்
இலங்கை மத்திய வங்கி, இல. 30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி : 011-2477330 தொலைநகல் : 011-2477715